**நொச்சியாகம பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நொச்சியாகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை காசுப் பாய்ச்சலினையும் நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா 10,500 ஆன வாடகை வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 31,500 என காண்பிக்கப்பட்டமையால் வருமானம் ரூபா 21,000 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினுள் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபை அமைச்சின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 535,000 பெறுமதியான டவர் மற்றும் நீர் பவுசர் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட நீர் வருமானம் ரூபா 10,233,534 ஆக இருந்த போதிலும் வருமானச் செலவின கணக்கில் ரூபா 10,523,683 எனக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 290,149 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சுகாதார சேவைகள் பிரயாணச் செலவினம் ரூபா 231,883 வருமானச் செலவினக் கணக்கிற்கு உள்ளடக்கப்படாமை காரணமாக அப்பெறுமதியான குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) பதிவேடுகளின் பிரகாரம் பட்டியலிப்பட்ட ரூபா 1,909,329 பெறுமதியான வீதவரி நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,765,000 எனக் காண்பிக்கப்பட்டமையால் வருமானம் ரூபா 144,324 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பதிவேட்டின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் நிலுவை வீதவரி ரூபா 4,405,622 நிதிக் கூற்றுக்களில் ரூபா 4,422,771 ஆக காணப்பட்டமை காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் ரூபா 17,149 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் தொடர்ச்சியாக காணப்பட 22 அறிவித்தல் பதாதைகளுக்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 2,226,890 நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,409,160 என கணக்கீடு செய்த காரணமாக வருமானம் ரூபா 182,270 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 04 வருமான விடயங்களின் மீதிகள் அதற்குரிய அட்டவணைகளின் ஒப்பிடும் போது ரூபா 151,436 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) நிதி நிலைமைக்கூற்றில் உள்ளடக்கப்பட்ட நிலுவை வருமானம் மற்றும் பி.ச. 07 இல் குறிப்பிடப்பட்டிருந்த நிலுவை வருமானத்திற்கு இடையே ரூபா 2,441,356 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(இ) நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன பங்களிப்பு கணக்கிற்கு இடையே ரூபா 315,365 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களிலிருந்து உருவாகியிருந்த 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 217,153 தொகையான தொங்கல் கணக்கின் மீதி இனங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

வருடக் கணக்காக முன்கொண்டு வரப்பட்ட ரூபா 3,268,521 ஆன செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகள் மீளாய்வாண்டில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 115,622,948 தொகையான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தவோ மெய்மையாய்வு செய்யவோ முடியாதிருந்தன.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் 177 ஆம் பிரிவு | சபையில் சேவை புரிகின்ற தற்காலிக மற்றும் அமைய உத்தியோகத்தர்கள் சபையின் சேவை பூர்த்தி செய்த போது அவர்களுக்குரிய பணிக்கொடை கொடுப்பனவிற்காக முன்மொழிவு முறைமையொன்று தாபிக்கும் பொருட்டு நிதியமொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 218 | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டிலும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபை பயன்படுத்தும் கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

02. **நிதி மீளாய்வு**

--------------------------

**2.1** **நிதி விளைவுகள்**

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விட கூடிய வருமானம் ரூபா 4,772,812 ஆக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விட கூடிய வருமானம் ரூபா 3,726,581 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி பெறுமதி | 2017 இல் பட்டியலிடப் பட்ட வருமானம் பெறுமதி | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| | | | 2017.01.01 மீதியில் பெறுகை பெறுமதி | 2017 பட்டியலிடப்பட்டது காசாக பெறுமதி | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி | 3,570,916 | 1,765,004 | 3,570,916 | 729,803 | 4,422,771 |
| வாடகை வருமானம் | 5,584,125 | 632,400 | 5,584,125 | 261,100 | 7,391,107 |
| குப்பை வரி | 118,000 | 710,000 | - | 657,000 | 171,000 |
| அனுமதிப் பத்திரங்கள் | 1,730,658 | 5,048,303 | 1,730,658 | 3,800,000 | 3,011,949 |
| நீதிமன்றத் தண்டப்பணம் | 167,940 | - | - | - | 167,940 |
| நீர் வருமானம் | | | | | |
| இஹவாட்லிட்டி யாவ | 1,327,834 | 3,947,011 | 1,327,834 | 3,244,049 | 1,764,781 |
| நொச்சியாகம | 2,007,537 | 5,655,940 | 2,007,537 | 5,186,247 | 2,975,272 |
| குகுள்கட்டுவ | 266,713 | 307,424 | 266,713 | 250,100 | 49,969 |
| ஹொருவில | 185,088 | 323,159 | 185,088 | 304,858 | 235,539 |
| மொத்தம் | 14,958,811 | 18,389,241 | 14,672,871 | 14,433,157 | 20,390,328 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் சபையினால் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 18,389,241 ஆக இருந்த போதிலும் அதில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 14,533,157 ஆக இருந்தமையால் அது பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 79 சதவீதமாக இருந்தது.

### 2.2.3 வீத வரி

ஆண்டிற்குரிய பட்டியலிடப்பட்ட வீதவரி ரூபா 1,765,004 ஆக இருந்த போதிலும் அதில் 41 சதவீதமான ரூபா 729,803 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. ரூபா 1,035,201 நிலுவை வரி தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பாடுகளை எடுத்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட கடை வாடகை மற்றும் வீட்டுவாடகை வருமானம் ரூபா 632,400 ஆக இருந்த போதிலும் சேகரிக்கப்பட்ட வருமனம் ரூபா 261,100 ஆக இருந்தமையால் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை வாடகை பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 371,300 தொகை உட்பட மேலும் 18 கடைகளை வாடகைக்கு பெற்றுக்கொண்டோர் வாடகை கொடுப்பனவை எய்ப்புச் செய்திருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159(i) இன் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.5. ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) தனியார் கம்பனியொன்றினால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அறிவித்தல் பதாதைக்காக 2017 யூன் 27 ஆந் திகதி ரூபா 57,640 பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2017 யூன் 25 ஆந் திகதி வரை கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 54,255 ஆன 07 அறிவித்தல் பதாதைகளுக்காக கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் பெயர் பலகை அகற்றப்பட்டு பிரதேச வளவில் வைக்கப்பட்டிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ் விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளுக்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் நிறைவேற்றத்திற்குரிய

எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் காலப்பகுதி குறிப்பிடப்படாமை காரணமாக முறையான செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று அல்ல என அவதானிக்கப்பட்டது.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

உள்ளுராட்சி மன்ற அமைச்சின் நிதி உதவிகளின் மூலம் ரூபா 4,440,381 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கழிவுப்பொருள் மீள் சுழற்சி கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்கப்படாமையால் 04 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபையில் நாளாந்தம் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் மீள்சுழற்சி செய்யப்படாமல் குசும்புற சபைக்குரிய காணியில் சுற்றாடலுக்கு பாதகமான வகையில் வெளியேற்றப்படுவதால் அப்பிரதேச மக்களின் வாழ்க்கை நிலைமைக்கும் சுகாதாரத்திற்கும் தடையொன்றாக இருந்தது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய முத்திரை கட்டண வருமானம் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

சபைக்குரிய ரூபா 1,349,850 கூட்டுத்தொகையான 05 சொத்து உருப்படிகள் மற்றும் பெறுமதி மதிப்பிட முடியாத 03 சொத்து விடயங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

**3.4 பெறுகை செயற்பாடு**

**3.4.1 பெறுகை திட்டம்**

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 உள்ளகக் கணக்காய்வு**

2015 மார்ச் 18 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரது சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதேச சபையின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத் சுற்றறிக்கையின் பிரகாரம் விநியோகிக்கப்பட்டுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) மதிப்பிடப்பட்ட வருமானம் அறவிடப்படாமை<br>(ii) செலவின கட்டுப்பாட்டை மேற்கொள்ளாமை |
| (ஆ) கணக்கீடு | கணக்கு / பதிவேடுகள் அறிக்கைள் முறையாக பேணிச் செல்லப்படாமை |
| (இ) உள்ளகக் கட்டுப்பாடு | (i) உள்ளகக் கணக்காய்வு செயற்படுத்தப்படாமை<br>(ii) கணக்காய்வு மற்றம் முகாமைத்துவ குழு நடாத்தப்படாமை |
| (உ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் | முறையாக கழிவுப்பொருட்களை வெளியேற்றல் |